**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.திருவேங்கிடம், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திரு.திருவேங்கிடம். |
| வயது | - | |
| தந்தை/கணவர் பெயர் | - | த.பெ.கோவிந்தராஜ் |
| கிராமம் | - | அழிவிடைதாங்கி |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

05.09.2023
பி.வா.சா.1.
**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

இவ்வழக்கில் எனது மனைவியான 1ம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். 1ம் வாதியின் மாமனார் சில சொத்துக்களை விற்பனை செய்து அதில் வந்த தொகையை 1ம் வாதிக்கு கொடுத்ததாக 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுளார். அதற்கான ஆதார ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் 1ம் வாதியின் மாமனார் சொத்துக்கள் விற்பனை செய்ததற்கான கிரைய ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) தாவா சொத்துக்கள் அய்யாகண்ணு காலத்தில் பாகம் பிரிக்கப்படவில்லை அவரது காலத்திற்கு பின்னா் குப்பன் பாகம் பிரித்து விற்பனை செய்தாா். நானும் எனது பிரமாண வாக்குமூலத்தில் ஓா் இடத்தில் அய்யாகண்ணு காலத்திலேயே பாகம் பிரிக்கப்பட்டதாகவும் மற்றொரு இடத்தில் குப்பன் காலத்தில் பாகம் பிரிக்கப்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் சொத்தை விற்பனை செய்துள்ளாாகள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

3) தாவா பி அட்டவணை சொத்தில் 1 முதல் 6 வரையான அயிட்ட சொத்துக்கள் யாா் யாருக்கு யாா் யாா் கிரையம் கொடுத்தாா்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. குப்பன் கிளாா் கிராமத்தில் காலமாகவில்லை. வயலூரில் காலமானாா். 1ம் வாதியை குப்பன் திருமணம் செய்துகொண்டு திருமணம் ஆன 4 மாதத்தில் கிளாா் கிராமத்திற்கு சென்றுவிட்டாா். சொத்துக்களை விற்று கிளாா் கிராமத்தில் சொத்தை கிரையம் வாங்கினாா் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி தனது கணவா் பாகத்தை விற்பனை செய்துவிட்டு பணமாக எடுத்துச்சென்றுவிட்டாா் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் அதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்குள் பாகம் பிரிக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன். யாா் யாருக்கு என்ன என்ன சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1ம் வாதியின் கணவா் அவரது மாமியாா் வீடான கிளாா் கிராமத்திற்கு குடிபெயா்ந்துவிட்டாலும் 1 முதல் 4 வரையான வாதிகளோடு கூட்டாக தாவா சொத்தை அனுபவித்து வந்தாா் என்று சொன்னால் சரியல்ல.

4) குப்பனுக்கும் 1ம் வாதிக்கும் 1983ல் திருமணம் நடந்திருக்கும். வாதிகள் குடும்பத்தில் நான் ஒரு வாரிசாக இல்லாத நிலையில் அவர்களுக்குள் பாகம் ஏற்பட்டுவிட்டதாக நான் சொல்லும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் விலை உயர்ந்துவிட்ட காரணத்தால் வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் இல்லையென வாதிகளை நாங்கள் அலைகழித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் குடும்ப சொத்து என்பதால் நானும் இதர வாரிசுகளும் வாதிகளின் பாகத்தை மறுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குடும்ப சொத்து அது குப்பனும், அய்யாகண்ணும் எந்தவிதமான அவணங்களும் எழுதி வைக்காத நிலையில் வாதிகளுக்கு தாவா சொத்தில் பாக உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4) பாகம் பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வதுபோல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் 1 முதல் 6 பிரதிவாதிகளோடு இணைந்து இதுநாள்வரை கூட்டாகதான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் பாகத்தை கொடுக்க மறுத்து வாதி தாவா சொத்தில் பாகம் செய்துகொண்டு விற்பனை செய்துவிட்டார் என்று வீண் வியாஜியம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள பாக பிரிவினை வழக்கின்படி வாதியின் பாகம் பிரித்துகொடுக்கப்படவேண்டியது என்றும், வாதியின் இத்தாவா அனுமதிக்க வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

11, 12ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.